[2015 செப்டம்பர் 22

318—

புதைவடங்கள்

***51095—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 45—வது வார்டு, வியாசர் நகர் 7—வது தெருவில், புதைவடம்மூலம் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெரம்பூர் தொகுதி, 45—வது வார்டு, வியாசர் நகர் 7—வது தெருவிற்கு, புதைவடம் மூலமாகத்தான் மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

முற்பகல் 10—10

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதைவடத்தின் மூலமாக மின் விநியோகம் பழைய சென்னை நகரம் முழுவதும் நடைபெறுகிறது. என்னுடைய கேள்வியிலே ஏற்பட்ட சிறு குழப்பம் என்னவென்றால், கம்பிவடம் புதைக்கப்பட்ட இடத்திலே அது தரைக்கு மேலேயே கிடப்பதால் அபாயகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அவற்றை பூமிக்கடியிலே புதைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வியின் பொருள். இப்பொழுது நான் கேள்வி கேட்ட இடத்திலே வெளியில் கிடந்த புதைவடம் தரைக்கடியிலே புதைக்கப்பட்டுவிட்டது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையிலே, பெரம்பூர் தொகுதியிலே பரவலாக கம்பி வடங்கள் பூமிக்கு மேலே கிடக்கின்றன. M.K.B. நகர் 4—வது கிராஸ், உதயசூரியன் நகர், கிருஷ்ணமகால் திருமண மண்டபம், வியாசர்பாடி மார்க்கெட், துர்க்கை அவென்யூ, காமராஜர் சாலை ஆகியவற்றை குறிப்பாகக்*

2015 செப்டம்பர் 22]

குறிப்பிடலாம். அவை அபாயகரமாக உள்ளன. சிறுவர்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. அம்பேத்கர் கல்லூரியில் கம்பிவட மின்கசிவால் ஒருவர் இறந்தே போனார். Mini pillar box–உடன் இணைக்கும் இடங்களில் கம்பிவடங்கள் தரையிலிருந்து மேலேவந்து இணைத்தபிறகு, மிச்சம் இருக்கிற கம்பிவடங்களை அப்படியே சுற்றிப்போட்டுவிட்டு போய்விடுகிறார்கள். இதுதான் என்னுடைய கேள்வியினுடைய சாரம். இப்படி இருக்கின்ற இடங்களில் கம்பிவடங்களைப் பூமிக்கடியில் புதைத்துத் தர வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருந்த மூலக்கேள்வி பெரம்பூர் தொகுதி, 45–வது வார்டு, வியாசர் நகர் 7–வது தெருவில் புதைவடம்மூலம் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா என்பதுதான். அதற்குத்தான் நான் பதில் சொல்லியிருந்தேன். 45–வது வார்டு, வியாசர் நகர் 7–வது தெரு மட்டுமல்ல, அதே வார்டில் மொத்தம் 8 தெருக்கள் இருக்கின்றன. அந்த 8 தெருக்களுக்குமே புதைவடம் மூலமாகத்தான் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியை மாற்றி இப்போது சொன்னதுபோல் கேட்டிருந்தால், அதற்குரிய பதிலையும் பெற்றிருக்க முடியும். ஒன்றிரண்டு இடங்களில் புதைவடம் தரைக்கு மேலே இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி புதைவடம் புதைக்கப்பட்டு, அதன்மூலம் மின் விநியோகம் செய்யப்படுகின்ற இடங்களிலே எல்லாம் உடனடியாக ஆய்வு செய்து, அதையெல்லாம் மீண்டும் பூமிக்கடியிலே புதைத்து, அதன்மூலமாக பாதுகாப்பான மின் விநியோகம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு விரைவாக எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

ஒரு சிறு விண்ணப்பம். புதை வடங்கள் இருக்கின்ற இடங்களிலே Mini pillar-கள் மூலமாகத்தான் மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது. அந்த Mini pillar-கள் இப்பொழுது அதிகமாகத் தேவைப்படுகின்றன. அதேபோல, Mini pillar-கள் இருக்கின்ற இடங்களிலே கதவுகள் இல்லாமல் இருக்கின்றன அல்லது அவை திறந்தே கிடக்கின்றன. வெங்கடேஸ்வரா நகர், தேபர் நகர், எம்.ஜி.ஆர். நகர், பாரதி நகர், தாமோதரன் நகர் போன்ற இடங்களிலே அதுகுறித்து நிறைய புகார்கள் வருகின்றன. பெரம்பூர் தொகுதியில் இப்பொழுதும் தரைக்குமேல் மின்சாரக் கம்பிகள் இருக்கின்றன. ஏற்கெனவே இந்த அவையிலேயே நான் இதுபற்றி கேள்வி கேட்டேன். புதைவடங்கள் போடப்பட வேண்டும் என்று கோரினேன். தாங்கள் அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன என்று அறிவித்தீர்கள். ஆனால், இப்பொழுதும் கொடுங்கையூர், சுந்தராம்பாள் நகர், ஸ்ரீராம் நகர், ஐஸ்வர்யா நகர், ஜம்புலிங்கம் தெரு, 63-வது வட்டம், கொளத்தூர்—காமராஜர் சாலை மற்றும் அன்னை சத்யா நகர் போன்ற இடங்களில் எல்லாம் தரைக்கு மேலே மின்சாரக் கம்பிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் புதைவடங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, R-APDRP என்று சொல்லக்கூடிய திருத்தியமைக்கப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் இப்பொழுது 45 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகளும், மற்றும் 259 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் ரூ.43.39 கோடி செலவில் புதைவடங்களாக மாற்றும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதிலே 3.54 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகளும், 22 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் புதைவடங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும், சென்னையில் 677 கி.மீ. புதிய உயர் அழுத்த மின் புதைவடம், New HT cables அமைக்கும் பணிகள் ரூ.176 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. அதில் 177 கி.மீ. உயர் அழுத்த மின் புதைவடம் அமைக்கப்பட்டுவிட்டது. இன்னும் ஏறத்தாழ 500 கி.மீ.-க்கு மேல் புதைவடம் புதைக்கப்பட இருக்கிறது. அந்தப் பணிகளும்

2015 செப்டம்பர் 22]

நடைபெற்று வருகின்றன. அதேபோல, பெரம்பூர், வியாசர்பாடி மற்றும் மாதவரம் பகுதிகளில் மட்டும் 9.5 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகளும், 150 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் ரூ.22.35 கோடி செலவில் புதைவடங்களாக மாற்றும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதில் ஏற்கெனவே 2.88 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகளும், 6 கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் புதைவடங்களாக மாற்றப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதிலே காலதாமதம் ஆவதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். மாநகராட்சியிலும், போக்குவரத்துக் காவல் துறையிலும் அனுமதி பெற்றுதான் மின் வாரியம் நிலத்தைத் தோண்டவேண்டும். மாநகராட்சியிலும், போக்குவரத்துக் காவல் துறையிலும் அனுமதி பெறுவதில்தான் சற்று காலதாமதமாகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம். ஆகவே, சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளிடமும், போக்குவரத்துக் காவல் துறை அதிகாரிகளிடமும் அவ்வப்போது நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி வருகிறேன். விரைவில் அனுமதியைப் பெற்று, புதைவடம் பதிக்கின்ற பணிகளை விரைவுபடுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக மேற்கொண்டுவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 319, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

319—

மாவட்ட இதர சாலையைச் சீரமைத்தல்

***56611—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—